கார்த்திகை- மார்கழி 2019

# அக்கினிக்குஞ்சு

134
041

## நமக்கொரு பாலகன் பிறந்தார், நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார்!

# போதகரின் மேசையில் இருந்து..

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

இந்த இதழ் மூலம் சந்திப்பதிலும் மகிழ்ச்சியடைகின்றேன். 2019ம் ஆண்டுக்கான கடைசி இதழ் இது. காலம் எவ்வளவு விரைவாய் ஒடுகின்றது என்பதைப் பார்த்தீர்களா?. உலகம் வேகமாய் சுற்றுவது போல ஒரு பிரம்மை. நிஜத்தில் உலகத்தின் வேகத்தில் மாற்றம் இல்லை, மாறாக நமது ஓட்டமும், நமது கால நகர்வும் நம்மை நகர்த்துவதற்கு பதிலாக ஓட வைப்பதி னால் இந்த ஓட்டம் விரைவாக இருப்பது போல் தோன்றுகின்றது.

இந்த வருடத்திலும் இதுவரையிலும் ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். இந்த இதழ் உங்கள் கைகளுக்கு கிடைக்கும்போது நான் இலங்கையிலும், இந்தியாவிலும் ஊழியம் செய்வ தற்காக சென்றிருப்பேன். எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். கள்ளியடி என்னும் இடத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடத்தைக் கட்ட விடாதபடி தடுத்து நிறுத்தியிருக்கின்றார்கள். அதனை தேவன் சீர்செய்து தரும்படி ஜெபியுங்கள்.

நவம்பர் 6-8ம்திகதி வரை நடைபெறவிருக்கும் திருப்பத்தூர் அக்கினி முகாமுக்காக ஜெபித் துக் கொள்ளுங்கள்.

மிசிசாகா, பிரம்டன், பகுதியில் இருப்பீர்களானால் எமது திருச்சபையின் ஆராதனையொன்றிற்கு உங்களை அன்புடன் அழைக்கின்றேன். வாருங்கள் சேர்ந்து ஆராதிக்கலாம்.




## துதியின் கூடாரம்

5155, Spectrum way
Unit #7
Mississauga ON
L4W 5A1
Canada.
Tel: 416 554 8448
pastormano@praisetabernacle.org

புலம்பல் தீர்க்கதரிசி என்றழைக்கப்படும் ஏரேமியா என்ற தீர்க்தரிசியின் வாயினூடாக தேவன் பேசியபோது, **"நான் மாமிசமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர், என்னாலே செய்யக் கூடாத காரியம் ஒன்றுண்டோ"**(எரே 32:27) என்று கேட்டார். வானத்தை விரித்து, பூமியைப் படைத்து, நட்சத்திரங்களை கட்டித் தொங்க விட்டு, சூரியனையும், சந்திரனையும், ஆகாயத்துக் கோள்களையும் அந்தரத்தில் மிதக்கவும், ஒழுங்காக சுற்றவும் கட்டயிட்டு, காற்றை தன் பண்டகசாலையில் இருந்து அனுப்பி, நட்சத்திரங்களைப் பெயர் சொல்லி அழைக்கும் தேவனாகிய கர்த்தரினால் செய்யக் கூடாத காரியம் ஒன்று ண்டோ?.

தேவனால் கூடாத காரியம் எதுவுமில்லை. அவர் சொல்ல ஆகும், கட்டளை யிட நிற்கும். நாம் ஆராதிக்கும் தேவன் கல்லும், மண்ணும், மரக்குற்றியில் இருந்து செய்யப்பட்ட விக்கிரகமும் அல்ல. அவர் வார்த்தையாய் இருந்தவர், மாமிசமாக நம் நடுவே வாசம் செய்தவர், நம்முடைய பாவங்களுக்காகவும், மீறுதல்களுக்காவும் அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு வாதிக்கப்பட்டவர். அவர் மரித்து மூன்றாம் உயிரோடு எழுந்து, சதாகாலமும் சர்வல்லவராய் உள்ள வர். ஆவரால் முடியாத காரியம் ஒன்றுண்டோ? கர்த்தரை நம்புங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள் என்ற சத்ததோடு போன யோசபாத்தைப் போல நாம் தேவனை நம்பிச் சாரும் போது அற்புதங்களையும் அதிசயங்களையும் அவர் நம்முடைய வாழ்வில் நிச்சயமாகவே செய்வார்.

எனக்கு 10 வயதாயிருக்கும் போது என்னுடைய கிராமத்தில் கண்ணாடிவிரி யன் என்னும் கொடிய விஷப்பாம்பு கடித்தது. இதனால் 7 நாட்கள் சுய நினைவின்றி ஒரு கிராம வைத்தியரின் வீட்டில் வைத்திருந்தார்கள். அந்நாட் களில் பாம்புக் கடிக்கு என்னுடைய கிராம வைத்திய நிலையங்களில் எந்த வித சிகிச்சையும்






அளிக்க முடியாதிருந்தது. காரணம் எந்த விதமான மருந் துப் பொருட்களும் கிடையாது நிலைமை. எங்ஙளூரில் இருந்த நாட்டு வைத்தி யரின் மருந்தில் நம்பிக்கையோடு இருந்த காலங்கள் அவை. என்னுடைய தகப்பனார் தாம் கொண்டிருந்த மதத்தில் தீராத பற்றுள்ளவர். சாகக் கிடக் கும் எனக்காக எல்லா தெய்வங்களுக்கும் பொருத்தனை பண்ணினார். நாட் கள் கடந்தன, எந்த முன்னேற்றமும் கிடையாது. மிகுந்த மனத்தளர்ச்சி யோடு இருந்த அவருக்கு, இயேசுவால் முடியும் என்ற உள்ளுணர்வின் நம் பிக்கை தளிர்த்தது. என்னை பிழைக்க வைத்தால் நான் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவருக்கென அவர் ஒப்புக் கொடுத்தார். எனது தகப்பனாரின் வாயில் இருந்து இந்த வார்த்தைகள் புறப்பட்டது முதல் எனது சரீரத்தில் முன்றேற்றம் காணப்பட்டது. அடுத்த 3 நாட்களுக்குள்ளாகவே மரிப்பதற்காக ஒப்புக் கொடுக்கப்பட்டவனாகிய நான் உயிரோடு எழுந்திருந்தேன். இன்று வரை உயிரோடிருப்பது தேவனாகிய கர்த்தர் என்வாழ்வில் செய்த அதிச யமே.

நம்முடைய தேவனால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? அவர் எப்படிப்பட்ட அதிசயங்களைச் செய்ய வல்லவராய் இருக்கின்றார்?

## மலடியைப் பிள்ளைத்தாச்சியாக்கும் அதிசயம்

(லூக் 1:36) இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்.

தேவனால் கூடாத காரியம் ஒன்றுண்டோ. பலவருடங்களாக பிள்ளையற்றிரு ந்த முதிர்வயதாயிருந்த எலிசபேத்தின் நிந்தையை நீக்கிய தேவன் நம் தேவன். ஒருவேளை உங்கள் வாழ்வில் எதுவுமே செழிப்பில்லாமல் இருக்க வாம், ஒருவேளை பொருளாதாரத்திலோ, அல்லது தேக சுகத்திலோ அல்லது வாழ்வின் விருத்தியிலோ பெருகாமல் இருப்பது போன்று உங்களுக்குத் தோன்றுகின்றதா? . இரட்சகராகிய கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள். அவர் நிந்தையைப் புரட்டிப் போடுகின்றவர். கர்ப்பத்தின் கனி கர்த்தரால் உண்டா கும் சுதந்திரம், பிள்ளைகள் அவரால் கிடைக்கும் பெலன். உங்கள் தேவன் உங்கள் கண்ணீரைக் காண்கின்றார். ஆகையினால் அதிசயம் செய்யும் தேவ னைக் கண்ணோக்கிப் பாருங்கள். கர்த்தர் இன்றே அதிசயம் செய்வார்.

## காற்றையும் கடலையும் அடக்கும் அதிசயம்

(மாற் 4:39) அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகு ந்த அமைதல் உண்டாயிற்று.

ஒருநாள் சீடர்களுடன் இயேசு கடலில் பயணித் துக் கொண்டிருந்தார். திடீரென கடலில் பயங் கரக் கொந்தளிப்பு உண்டாயிற்று. சீடர்கள் பயந்து அலறினார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எழுந்திருந்து காற்றையும் கடலையும் அதட்டினார். அப்பொழுது அமைதல் உண்டா னது என்று வேதம் சொல்லுகின்றது.

நம்முடைய சமாதனாத்தையும் அமைதியையும் கெடுப்பதற்காகவே பிசாசு நம்மைச் சுற்றித் திரிகின்றான். ஆகையினால் தான் கர்த்தர் " திருடன் கொல்லவும், அழிக்கவும், கெடுக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வாரன். நானோ ஜீவன் உண்டாகவும், பரிபூரணப்படவும் வந்தேன்" என்று யோவான் 10:10ல் தான் வந்த நோக்க த்தை நமக்குத் தெரியப்படுத்தினார். இங்கே சீடர்களுக்கு பயத்தை உண்டாக்கிய காரணிகள் இரண்டு. ஒன்று காணப்படுகின்ற காரணி. இரண்டாவது காணப்படாத காரணி. காணப்பட்டது கடல், காணப்படாதது காற்று. இவ்வாறே நம்முடைய வாழ்விலும் காணப்படுவதும், காணப்படாதுமான காரணிகளைக் கொண்டே பிசாசு வேதனைகளையும், சோத னைகளையும் நமக்கு அவன் உருவாக்குகின்றான். இவ்வாறு பிரச்சனைகளும் போராட்டங்களும் நம் படகை மோதும் போது, தேவனாகிய கர்த்தரின் வாக்குத் தத்தங்களை சொல்லி அதட்டி ஜெபம் செய்யும் போது பிசாசு ஓடிவிடுவான். நம்மால் ஆகாத காரியம் தேவனால் கூடும். தேவன் உங்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றார். " சர்ப்பத்தையும், தேளையும் மிதிக்கவும் சத்துருவின் சகல வலிமையை மேற்கொள்ளவும் நான் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கின்றேன் என்பதே அவரின் வாக்காகும்.

## வனாந்திரத்தில் போஷிக்கும் அதிசயம்

**(1இரா 17:6) காகங்கள் அவனுக்கு விடியற் காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங் கால த்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தது, தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான்.**

தேவன் தம்முடைய மக்களைப் போஷிக்கிறார். அவர்கள் வனாந்திரத்தில் இருந்தாலும் சரி, அல் லது பூமியின் கீழ் இருந்தாலும் சரி தேவன் தம் முடைய மக்கள் மேல் அன்பு கொண்டவராய் தம்முடைய ஊழியர்களையும், பிள்ளைகளை யும் போஷிக்கிறார். காகம் என்னும் பறவை தட்டிப் பறித்துண்ணும் சுபாவம் கொண்டது, ஆயி னும் தன்னுடைய ஊழியனைப் போஷிக்க இந்தப் பறவையின் அலகில் அப்பம் கொடுத்து அனுப்பும் தேவன் அவர். எலிசா என்னும தீர்க்க தரிசிக்கு காலை, மாலை நேரங்களில் காகம் உணவை அவனைத் தேடிக் கொண்டு வந்தது. அவ்வாறே நீதிமானையும் தேவன் துன்மார்க்கனைக் கொண்டும் போஷிப்பார். நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்தரம் வைத்துப்போகிறான்; பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்து வைக்கப்படும் ((நீதி 13:22) என்பதே வேதம் நமக்குச் சொல்லும் சத் தியமாகும். உங்கள் தேவன் ஆகாயத்துப் பறவையும், மண்ணுள் பூச்சியை யும் போஷிப்பவர். உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் போஷிக்க மாட்டாரா?. அநேகர் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலங்களைக் குறித்துக் கலங்குகின்றார்கள், தங்கள்




பிள்ளைகளின் வாழ்வைக் குறித்துக் கலங்கு கின்றார்கள். காரணமில்லாத கலக்கங்களால் அவர்கள் அடைவதெல்லாம் வேதனையும், வெட்கமும், வியாதியும் தான். கலங்காதிருங்கள். உங்கள் தேவன் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் பராமரிக்க வல்லவராய் இருக்கின்றார். நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்து க்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை(சங் 37:25)

## பாவிகளை நீதிமான்களாக்கும் அதிசயம்

நீயொரு பாவி என்று எல்லா மதங்களும் நியாயம் தீர்க்கும் போது, நீ பாவிதான், ஆனாலும் உன்பாவத்தைச் சுமந்து தீர்த் தேன் என்று சிலுவைநாதர் நம்மைப் பார் த்துச் சொல்லுவார். நமக்காக சிலுவை சும ந்தவர் அவர். நம்மை நீதிமான்களாக்கவே அவர் சிலுவை சுமந்தார். கர்த்தருடைய ரத்தம் சகல பாவங்கைளயும் நீக்கிச் சுத்தி கரித்து நம்மை இப்பொழுது பரிசுத்தவான் களாக்கிதோடன்றி, நம்மை பரலோகதின் சுதந்திரவாசிகளாய் மாற்றியிருக்கின்றது. நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்(1பேது 2:9). உங்களை நேசிக்கும் ஆண்டவர் உங்களோடிருக்கின்றார். அதிசயமும், அற்புதமும் உங்களைத் தொருகின்றன. இதோ, இப்பொழுதும் உங்கள் தேவன் உங்களைப் பார்த்துச் சொல்லுவது..என்னால் கூடாத காரியம் ஒன்றுண்டோ?

***2nd Saturday of the month @ 10:00 AM-12:00 PM***

SISTERS ON THE

# Rise

WOMEN'S MINISTRY

வாருங்கள், ஜெபிப்போம்!





# தாவீதின் சங்கீதங்கள்

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், சிங்களம், தெலுங்கு மொழிகளில் கிடைக்கின்றது

இது ஒரு சுத்தமான சாஸ்திரிய சங்கீத படைப்பு. அழையுங்கள்:

# 905 614 0209




# நீதிமொழிகள்

## இசைவடிவில்..

வாங்கிக் கேளுங்கள், உங்கள்
உங்கள் மனதில் நிலைக்கும்
நீதிமொழிகள்! அழையுங்கள்
சகோ. பென்ஜமின்

# 905 614 0209

# ஜார்ஜ் வாஷிங்டன்



அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்த காலத்தில் ஜார்ஜ் வாஷிங்டன் ராணுவ தளபதியாக இருந்தார். ராணுவத்தில் சிறு பணியில் இருந்த ஒருவரின் கீழிருந்த சில வீரர்கள், அந்தக் கடும் குளிர் காலத்தில் தாங்கள் செல்லும் வழியில் ஒரு பாலம் அமைக்கும் படியாக ஒரு பெரிய கட்டையை உந்தித் தள்ளிக் கொண்டிருப்பதை ஜார்ஜ் கண்டார். அதைத் தள்ளுவதால் வீரர்கள் களைப்படைந்து கொண்டிருப்பதை அறிந்து கொண்டார்.

அந்த வீரர்களின் கண்காணிப்பாளரான அந்த பணியாளனோ தன் கையில் கோலுடன் ஒரு பக்கமாய் அங்கு நின்று கொண்டு கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தான். இந்த நிலையில் வீரர்களுக்கு உதவி தேவை என்பதை கண்டு கொண்ட ஜார்ஜ் வாஷிங்டன், தானே முன் சென்று அவர்களுடன் சேர்ந்து கொண்டு, பளுவான அந்த கட்டையைத் தள்ளினார். முடிவில் நல்லதொரு பாலமும் அமைக்கப்பட்டது.

அவர் தன் தொப்பியைச் சற்று தாழ்த்தி அணிந்திருந்தபடியால் பலரும் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அவர் விடை பெறும் போது அந்த சிறிய பணியாளனை நோக்கி, ”நம் வீரர்கள் இவ்வளவு கடினமாகி பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்தபோது, நீர் அவர்களுக்குச் சற்று உதவி செய்திருக்கலாமே“ என்றார்.

அவனோ, ”என் அடையாள சின்னத்தை நீர் பார்க்கவில்லையா? நான் ஒரு ராணுவ உத்தியோகஸ்தன்“ என்றான்.

ஜார்ஜ் வாஷிங்டன் தன் தொப்பியைச் சற்று உயர்த்தி, ”நான் ராணுவத்தளபதி! இன்னொரு முறை இப்படி ஒரு பளுவான கட்டையை தள்ள வேண்டியது வரும் போது, தயவு செய்து என்னைக் கூப்பிடுங்கள்,“ என்று கூறி விட்டு நகர்ந்தார். அந்த

பணியாளன் அதிர்ச்சி அடைந்தான். தன்னைத் தாழ்த்தி பணிவிடை செய்த ஜார்ஜ் வாஷிங்டன் பின்னாளில் அமெரிக காவின் ஜனாதிபதியானார். காரணம் அவருக்குள் கிறிஸ்துவின் சிந்தை இருந்தது.

கிறிஸ்துவின் சிந்தை என்பது என்ன?
'அவர் (இயேசு கிறிஸ்து) தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே பொறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலனார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு மரணபரிந்தயம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். (பிலி.2: 5-8)
இப்படிப்பட்ட தாழ்மையின் சிந்தை நமக்கு அவசியம்.
தேவன் நமக்கு தந்திருக்கிற பொறுப்புக்களை நினைத்து பெருமைப்படாமல் பாக்கியமாக கருதுங்கள். தேவனே எல்லாவற்றையும் ஆளுகை செய்கிறவர் என்பதை உணர்ந்து துன்மார்க்கரிடமும் தேவ மனுஷன் தாழ்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். நம்மிடம் இருக்கிற அதிகாரங்களை தவறாய் பயன்படுத்தக் கூடாது. இயேசுகிறிஸ்து ராஜாதி ராஜாவாக இருந்தும் சாதாரண மனிதர்களான நம்முடைய கால்களைக் கழுவினார். இதுதான் தலைவனாய் இருக்கிறவருடைய குணாதிசயம்.

தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்பதை உணர்ந்து கொள்வோம்.



# When Life Doesn't Do What You Want It To do..

**God is rerouting you, and that's okay.**

Sometimes I get the feeling Google Maps is getting a little annoyed with me. She gives me directions, and I'm pretty sure I'm following them. Then the next thing I know, she is correcting me.

"Rerouting," she says.

The first time she sounds remarkably polite and patient. And the second time too.

But the third time? The fourth? Maybe I am imagining it, but I swear she starts muttering insults by the time I get turned around.

Life can get pretty confusing at times, can't it? We think we are on the right path, exactly where God wants us to be, and then to our surprise, He interrupts us: "Rerouting."

That is why I am so glad God gave us his word. It's the best guide out there for navigating this crazy world.

I once read an amazing story about a woman who knew the truth about the power of God's Word to lead the way during the darkest and most confusing of times. She was a missionary, and she had been imprisoned in one of the brutal Japanese prisoner of war camps during World War II. When the war finally ended and the Japanese concentration camp gates swung open, the newly liberated prisoners slowly began walking away from brutality so severe they no longer had the strength even to lift their heads.

Except for one person. Her face was still vibrant and alive. The spirit of this woman, the missionary, had endured because she had a secret weapon: a contraband copy of the Gospel of John. Each night, with her blanket pulled over her head, she risked death by reading a small passage by flashlight and memorizing it. Once she committed a page to memory, she sneaked it to the bathhouse and let water run on it until it dissolved down the drain. She ended up memorizing the entire gospel, and God's Word guided her through the darkness of those bitter years of suffering to the freedom awaiting her on the other side of the prison gate.

I pray you haven't suffered such harsh circumstances and never will, but I hope you have experienced the guiding power of God's Word in your life. So many times over the years, God has spoken to me by bringing scripture to mind. Each time it happens, I am so thankful I've spent time in his Word, reading and

rereading certain passages until I have committed them to memory.

I also treasure the comfort and strength God brings through memorized Scripture when I can't sleep and my heart is troubled. On many nights I have drifted off to sleep by going through the scriptures stored in my mind. Like the psalmist, I have found that when my “soul is weary with sorrow,” God will “strengthen me according to [his] word” (Psalm 119:28).

One of the greatest gifts you can ever give yourself is to hide God's Word in your heart. He is forever speaking through his Word to bring comfort and strength to your soul.

So don't worry too much about the moments when life gets confusing, and you hear God whisper his words of “rerouting” to your heart. Just stay close to his word. It is full of solid direction for your life. The destination is just ahead.

Five Minutes in the Word

The Lord went before them by day in a pillar of cloud to lead the way, and by night in a pillar of fire to give them light, so as to go by day and night. He did not take away the pillar of cloud by day or the pillar of fire by night from before the people. Exodus 13:21–22 NKJV

You, Lord, keep my lamp burning; my God turns my darkness into light. Psalm 18:28

The light shines in the darkness, and the darkness has not overcome it. John 1:5

By your words I can see where I'm going; they throw a beam of light on my dark path. Psalm 119:105




இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். வெளி
பெயர்செபா ஜெபகுழு நடத்தும்
சுவிசேஷ கூட்டம்
நாள் :
09.11.2019 சனிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு
இடம்:
நெ. 83, காளியம்மன் கோயில் தெரு,
(அட்வென்ட் திருச்சபை எதிரில்)
விருகம்பாக்கம், சென்னை-92.
தேவ செய்தி
Pastor. மனோ
தேவ பிரசன்னத்தில் களிகூற யாவரையும் அன்புடன் அழைக்கிறோம் உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
தொடர்பு : Bro.D. தேவ ஆசீர்வாதம் BEER- SHEBA PRAYER CELL, Contact: 9841207444
குறிப்பு : பிரதி 2வது சனிக்கிழமை இக்கூடுகை நடைபெறும்.

# CHURCH AND RESPECT

**by Sharla Guenther**

Have you ever been to a King or Queen's palace? How would you act if you were invited there? Would you run around and talk loudly? Would you push your brother or sister and talk back to your parents? Would you ignore the Queen if she talked to you?



I'm sure you would be on your best behavior. You would listen to your parents, mind all your manners, say "please" and "thank-you", and be careful not to break anything.

One last question, why would you be on your best behavior at the Queen's palace? Is it because the Queen is important and she has lots of nice things, and you just know that you are supposed to be good in a fancy place like that?

This lesson is about how we should behave in God's house. Church is a special place where we learn more about God and worship him. God doesn't actually live there because God is everywhere but it's one of the special places we can go just to honor him without any distractions of the outside world.

Have you ever noticed that people dress up when they

go to church. That's because people are trying to be respectful to God and to get ready to worship him. Have you ever wondered why people close their eyes and bow their heads when they pray? People do that so they can think about what they're praying to God and not looking and thinking about other things. We bow our heads because God is our King and he deserves respect like a King and so much more!

When you are respectful you listen to others and treat others the way you want to be treated. So how can you




respect others at church? By treating church like God's house and listening to your teachers and parents, by walking instead of running and using your quiet voice instead of your loud voice.

Sometimes in church there are special times that we're allowed to run around (in the church gym or a during a special lesson in Sunday School) and that's okay if the teachers or parents give you permission but otherwise we need to learn and listen to what the leaders say.

Your teachers spend lots of time getting ready for a special Sunday School lesson just for you. They care a lot about each one of you and want you to learn important things that can help you. It makes them sad and disappointed if you don't listen and that makes God sad.

When we respect others we are also respecting God. So you may have guessed that we aren't just supposed to

be good in church but everywhere! Respecting everyone we pass by. Since God is everywhere he can see how we treat others and if we are making them happy or sad.

There's a verse in the Bible **(Romans 12:10)** that says, love each other honestly and treat others better than you would treat yourself.

That means listening to your teachers at school, babysitters, parents and grandparents. It also means respecting other people's things. So when someone has a toy or book that you want it's not right just to take it away from them. Ask them nicely and if they still don't want to share play with something else until they're finished. I know that can be tough but that's what God wants us to do.

Start to think about respect everywhere you go (the grocery store, other people's houses, even restaurants). Sometimes it's important to be on your very best behavior, but your parents understand you need play time and a time to be loud too.

So have lots of fun but just keep in mind that church is a special place to learn about God and we need to treat it just like a king's palace (because God is our king). Listen to your parents and teachers, they love you and want the best for you and that's how you can make God happy!



# How to talk to God about the person you may marry.



Recently a young man asked me a question I have been asked frequently over the years, namely, "How can I pray for my future spouse?" Here are three simple points I encouraged him to consider. And I would encourage young woman in the same way:

First, pray that God forms you into the kind of person worth marrying.

If you are a young person, it is human nature to begin by focussing on the kind of spouse you want to marry. But a better approach is to first look at your own life and ask if you are the kind of person someone else would want to marry. Do you have integrity? Do you have the fruits of the Spirit, such as faithfulness and self-control (Galatians 5:22-23)? Do you have healthy relationships with peers and adults?

If not, begin to work on these areas in your own life through

prayer, Scripture study, accountability, and spiritual disciplines. Start by looking internally rather than externally. And remember, the character you are developing now will carry into your future marriage.

Second, pray for someone with godly character, not merely outward beauty.

In other words, don't value external beauty over character. Proverbs 11:22 says, "Like a gold ring in a pig's snout is a beautiful woman without discretion." Of course, similar wisdom applies to an attractive man who lacks discretion.

The key point Solomon is making (which I challenged this young man to prayerfully consider) is not to sacrifice character for external beauty. Given that our culture so deeply values outer appearance, this is an easy mistake to make. But if you start praying now for a spouse with character, God can help guard your heart in advance.

Third, pray that you can trust God regardless of the results.

The Bible doesn't promise a spouse to those who ask. Yes, Psalms 37:4 says that if we delight in the Lord, He will give us the desires of our hearts. But the Scripture doesn't say when or how God may do this. And it could be that God recognizes deeper desires in our hearts than we do and ultimately fulfills them in ways we cannot imagine.

The Bible does talk a lot about how we can expect to suffer for doing what is right (1 Peter 3:17). We live in a world deeply broken and ravaged by sin (Romans

3:9-18). This brokenness can manifest itself in a variety of ways. At some point, the question all of us have to ask is:

Will I trust God even when things don't work out as I planned?

This last point can be hardest for young people to accept. In fact, it is hard for all of us to accept.

If you are a young person who wants to be married, I encourage you to lay out your requests earnestly to the Lord (Phil 4:6). And yet amidst your requests, ask God for the strength to trust Him regardless of what the future holds.





# தாய்மை என்னும் வரம்

அன்புச் சகோதரியே, இந்த இதழ் மூலமாயும் உங்களைச்சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். நாம் தேவனால் படைக்கப்பட்ட போது, நமக்கென்று தெய்வீக கடமையும் நம்மேல் சுமத்தப்பட்டது. அது தாய்மை என்பதாகும். தாய்மை என்பது வரம் என்றும் அழைக்கலாம். பிள்ளைகள் இல்லாத இளம் தம்பதிகள் எவ்வளவோ செலவு செய்து செயற்கைக் கருத்தரிப்பின் மூலமாவது குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றார்கள். காரணம் தாய்மை என்பது கொடை. அதனைத் தேவன் பெண்களுக்கு மிகுந்த கனக் கொடையாக அருளியிருக்கின்றார்.

இப்படிப்பட்ட கனம் பெற்ற கொடையை நீங்கள் எவ்வாறு செலவழிக்கின்றீர்கள்?

பரிசுத்த வேதாகமத்தில் ஒரு தாயையும், பாட்டியையும் வேதம் நமக்கு அறிமுகம் செய்கின்றது. இவர்கள் நமக்கு அடையாளமானவர்கள்.

அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக் குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன் (2தீமோ-1:5).

ஒரு தாயும், பாட்டியும் சேர்ந்து ஒரு உண்மையான ஊழியனை உருவாக்கினார்கள். அவர்களின் குடும்பத்திலும் நம்முடைய குடும்பத்தைப் போல குழப்பங்கள் இருந்தன. தீமோத்தேயு என்னும் இந்த இளைய ஊழியன் ஒரு முழுமையான யூதக்குடும்பத்தைச் சேர்ந்தவனல்ல. அப்-16:1ம் வசனம் சொல்லுகின்றது அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான். அவன் தாய் விசவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன். தீமோத்தேயுவின் தகப்பன் யூதனல்லாதவன். ஆனால் வேத எழுத்துக்களை அறிந்த வல்லவனாய் இருந்தான் என்று 2 தீமோ 3:15 சொல்லுகின் றது.

உங்கள் குடும்பமும் இப்படிப்பட்ட சூழ்நிலையில்

இருக்கலாம். ஒருவேளை உங்கள் கணவன் இரட்சி க்கப்படாதவராயோ அல்லது தேவனை அறியாதவராயோ இருக்கலாம். இது உண்மையாகவே குடும்ப த்திற்குள் விசுவாச குழப்பதை ஏற்படுத்தும். கணவனின் அலட்சியமும், கடவுளைத் தேடாத தன்மையும் உங்கள் பிள்ளைகளை தேவனை அறியும் அறிவில் இருந்து பிரிக்கின்றதா?. அதற்கு மட்டும் இடம் கொடாதிருங்கள்.

தீமோத்தேயுவின் தாயும், பாட்டியும் சேர்ந்து கடவுள் பயத்தையும், வேத அறிவையும் ஊட்டி வளர்த்தார்கள். யார் வந்தாலும் வராவிட்டாலும் ஓய்வுநாள் பாடசாலைக்கு கூட்டிப் போய் உங்கள் குழந்தைக்கு தேவனை ஊட்டி, ஊட்டி வளருங்கள். ஒருகாலத்தில் உங்கள் பெயர் சொல்லும் பிள்ளையாக, உண்மையான ஊழியனாக வளர உதவி செய்யு ங்கள்.

தாய்மை என்பது தேவனுடைய கொடை. நம்முடைய தமிழ்மறை எனப்படும் திருக்குறள் என்னும் நூல் மகப்பேறு என்னும் அதிகாரத்தில் இவ்வாறு சொல்லுகின்றது.

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற''

என்று நமக்குச் சொல்லுகின்றது. அதன் அர்த்தம் என்னவென்றால் பெறத்தகுந்த பேறுகளில் அறிய வேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர, மற்றப்பேறுகளை யாம் மதிப்பதில்லை என்பதாகும். உங்கள் மக்கள் நன்மக்களாய் வாழ அவர்களுக்கு தெய்வ பயத்தை ஊட்டி வளர்க்க தயங்காதிருங்கள்.

எந்த வீட்டில் குடும்ப ஜெபத்தில் பிள்ளைகள் வளருகின்றார்களோ அவர்கள் கர்த்தரின் தோட்டத்தில் நாட்டப்பட்ட பச்சையான மரத்தைப் போலிருப்பார்கள். எப்பொழுது வீடுகளில் வேதவாசிப்பும், ஜெபமும் இல்லையோ அந்த வீட்டின் பிள்ளைகள் உலகத்தோடு கலந்த உலோகமாய் இருப்பார்கள் என்தற்கு பாபிலோனில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் அடையாளமாய் இருந்தார்கள். அவர்கள் பிள்ளைகள் பேசின பேச்சில் பாதி அஸ்தோத் பாஷையாயிருந்தது, இவர்கள் அந்தந்த ஜாதிகளின் பாஷையைத்தவிர, யூதபாஷையைத் திட்டமாய்ப் பேச அறியாதிருந்தார்கள் ((நெகே 13:24). இந்த வசனமும் கூட தாயின் அலட்சியத்தால் விளைந்த விளைவுதான். தங்கள் தாய்மொழியை மறந்த பிள் ளைகளும், தங்கள் தேவனை அறியாத பிள்ளைகளுமாய் வளர்ந்தார்கள்.

நீங்கள் உங்கள் வரத்தை, கொடையை எப்படி செலவழிக்கின்றீர்கள். ஒரு தாய் தன் கஸ்ட சூழ் நிலையிலும் தன்மகனை தேவனுக்குள் வளர்த்தாள். இன்னுமொரு தாய் தன் மொழியையும், விசுவாசத்தையும் தன் பிள்ளைகளுக்குள் வளர்க்க மறந்தாள். நீங்கள் எப்படிப பட்டவர்கள்?

# Praise Tabernacle

**Every Sunday**

8:00 AM- Preparation prayer
9:15 AM- 1st Service - English
9:30 AM - Sunday School
10:30 AM- 2nd Service - Tamil/English
11:15 AM - Gateway Young adults and youth
6:00 PM - 3rd Service - Tamil

## weekdays:

**Wednesday 10:30 AM - Denial prayer**
**Thursday 7:30 PM - Bible study**

**Monthly :**

1st day of the month @ 5:00 AM- Communion
1st Saturday of the month @ 9:30 AM- Fasting and prayers.
2nd Saturday of the month @ 10:00 AM-12:00 PM Women's prayer
2nd Saturday of the month @ 10:00 AM-12:00 PM Young adults and youth Fasting prayer
3rd Friday of the month @ 10:00 PM- Night prayer



## Our VisionS

Reach the unreached.
Preach the Word.
A Place for Everyone.
Living out what we believe.
Helping people find their way back to God.

# அக்கினி அபிஷேக முகாம்

## *Anointing Fire Camp*



**நாள்:**

நவம்பர் 7,8,9 - 2019
(வியாழன், வெள்ளி, சனி)
வியாழன் காலை 9.00 மணி முதல்
சனி மதியம் 1.00 மணி வரை.

**இடம்:**

அன்றன்றுள்ள அப்பம் ஜெபமண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம் அருகில்,
திருப்பத்தூர்,
வேலூர் மாவட்டம்.

**செய்தியாளர்கள் :**

சகோ. G.P.S. ராபின்சன்
போதகர். ஆபிரகாம் ராஜன் (USA)
போதகர். மனோ தர்மலிங்கம் (Canada)
போதகர். ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை
சகோதரி. எலிசபெத் ராஜ்குமார்



குடும்பமாக கலந்து
கொள்ளுங்கள்!!



சிறுபிள்ளைகளுக்கான
விசேஷித்த நிகழ்ச்சிகள்
உண்டு!